*4*

# இயேசுவைப் பாதுகாத்த

## (2:13–23)

"பிள்ளையை" பத்திரமாகப் பாதுகாத்தல் என்ற மெய்சிலிர்க்கும் வரலாற்றில், யோசேப்பும் மரியாளும் எவ்வாறு எகிப்துக்குப் பயணம் சென்றனர் என்றும் அவர்களை இஸ்ரவேல் நாட்டிற்குத் திரும்பும்படி கூறும் வரையில் அவர்கள் அங்கு தங்கியிருந்தது பற்றியும் மத்தேயு கூறினார்.

### *எகிப்துக்கு ஓடிப்போகுதல் (2:13-15)*

**[13]அவர்கள் போனபின்பு, கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்கு காணப்பட்டு, ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான்; ஆதலால் நீ எழுந்து பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லும்வரைக்கும் அங்கே இரு என்றான்.**

**[14]அவன் எழுந்து, இரவிலே பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்குப் புறப்பட்டுப்போய். [15]ஏரோதின் மரணபரியந்தம் அங்கே இருந்தான். எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று, தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தரால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.**

**வசனம் 13.** ஞானிகள் புறப்பட்டுச் சென்றபின்பு, மரியாளையும் குழந்தையாக இருந்த இயேசுவையும் அழைத்துக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போகும்படி, **யோசேப்பு ஒரு தூதனால் கனவில் எச்சரிக்கப்பட்டார்.** அந்தக் குடும்பத்திற்கும் ஏரோதுக்கும் இடையில் சாத்தியமான அளவு அதிக தூரத்தில் வைத்தல், அதாவது குறைந்த பட்சம் அவரது ஆளுகைப் பகுதிக்கு அப்பால் வைத்தல் என்பதே இந்த பயணத்தின் நோக்கமாக இருந்தது. எகிப்தின் எல்லையானது, பெத்லகேமில் இருந்து சுமார் எழுபத்தி ஐந்து மைல்கள் தூரம் இருந்தது. ஏரோதுவின் அதிகாரம், எகிப்தின் நதிவரையில் மாத்திரமே விரிவாக்கப் பட்டிருந்தது. அங்கிருந்து ஆற்றின் கழிமுகப் பகுதியும் நைல் நதியும், ஏறக்குறைய இன்னொரு 125 மைல்கள் தூரம் இருந்தது.

அந்தக் காலத்தில் ரோமாபுரியின் மாகாணமாக இருந்த எகிப்து, பெருமளவு யூத மக்கள் தொகையையும் எண்ணற்ற ஜெப ஆலயங்களையும் கொண்டிருந்தது (காண்க நடபடிகள் 2:5, 10; 6:9; 18:24). அந்தக் காலத்தில், சுமார் பத்து இலட்சம் யூதர்கள், எகிப்தில் வாழ்ந்தனர் என்று, எகிப்தில் வாழ்ந்திருந்த யூதத் தத்துவஞானியும் வரலாற்றாளருமான பிலோ என்பவர், கி.மு. 40ம் ஆண்டில் எழுதினார்.[1] பழங்கால உலகத்தில் இருந்த மிகப்பெரிய நூலகங்களில் ஒன்று அலெக்ஸாண்டிரியாவில் இருந்தது. இங்குதான் செப்துவஜிந்த் (LXX) வேதாகமம்

*மொழிபெயர்க்கப் பட்டது. எகிப்துக்கு ஓடிப்போனது என்பது யோசேப்பை அவரது சொந்த மக்கள் பலரின் மத்தியில், ஆனால் ஏரோது வந்தடையக் கூடிய இடத்திற்கு அப்பால் வைத்தது. வேதாகமப் பதிவேடுகளின்படி, இது ஒன்றுதான் இயேசு தமது வாழ்வில் பாலஸ்தீனத்திற்கு வெளியே இருந்த ஒரே வேளையாக இருந்தது.*

*யோசேப்பு, எகிப்தில் இருந்து புறப்படுதல் பாதுகாப்பானது என்று தமக்குத் தேவன் வெளிப்படுத்தும் வரையில், அங்கேயே* **தங்கி இருக்கும்படியும்** *அறிவுறுத்தப்பட்டார். அவர்கள் அவ்வாறு செல்ல வேண்டியதற்கான காரணமும் அவருக்குக் கூறப்பட்டது:* **ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான்.**

***வசனம் 14.*** *கூடுதல் முன்னெச்சரிக்கையாக,* **யோசேப்பும்** *அவரது குடும்பமும்* **இரவுவேளையின்** *போது* **எகிப்துக்குப்** *புறப்பட்டனர். இங்குள்ள மொழிநடை, யோசேப்பு கனவு கண்டதும் உடனே நடவடிக்கை மேற்கொண்டார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது; தேவனுக்கு அவர் தொடர்ந்து கீழ்ப்படிந்தார் என்பது உறுதி (1:18-25; 2:13-15, 19-23). லியோன் மோரீஸ் அவர்கள், "அந்தச் சிறு குடும்பம் ஏழ்மையில் இருந்தது என்பது தெளிவு, அவர்கள் தங்கள் பயணத்திற்கான தயாரிப்பில் அதிகம் எதுவும் செய்ய வேண்டி இருந்திருக்காது, மற்றும் கனவானது அவசரத்தின் கருத்துணர்வைத் தெரியப் படுத்தியிருக்கும்" என்று குறிப்பிட்டார்.*[2]

*வசனம் 15. அந்தக் குடும்பம்,* **ஏரோது இறக்கும் வரையில்** *எகிப்தில்* **தங்கியிருந்தது.** *வரலாற்றின்படி, அவரது மரணம், கி.மு. 4 மார்ச் அல்லது எப்ரல் தொடக்கத்தில் நேர்ந்தது (2:19ன் மீதான விளக்கங்களைக் காணவும்). எகிப்தில் அந்தக் குடும்பம் தங்கியிருந்த மிகச்சரியான கால அளவு, மிகவும் குறுகியதாக, இரண்டு மாதங்கள் என்ற அளவுக்குச் சிறியதாக இருந்திருக்கலாம்.*

*ஓசியாவின்* **"எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்"** *என்ற வார்த்தைகளின் (ஓசியா 11:1) நிறைவேற்றமாக, எகிப்துக்கு இயேசுவின் ஓட்டம் பற்றியும் அதைத் தொடர்ந்து திரும்பி வருதல்பற்றியும் மத்தேயு விளக்கப் படுத்தினார். தொடக்ககாலத்தில் இவ்வார்த்தைகள் எகிப்திய அடிமைத்தளையில் இருந்து, இஸ்ரவேல் மக்கள் தேவனால் வெளிக்கொண்டுவரப் படுதல் பற்றி ஓசியாவுக்குக் கொடுக்கப்பட்டன (யாத்திராகமம் 12:40-51). இவற்றை மத்தேயு, இயேசுவுக்கு மாதிரி/எதிர்மாதிரி முறையில் பயன்படுத்தினார். J. W. மெக்கார்வீ அவர்கள், "இயேசுவுக்கு இந்த வார்த்தைகளை நடைமுறைப் படுத்தியதில் மத்தேயு, எகிப்திற்குள் இஸ்ரவேல் மக்கள் பிரவேசித்ததையும் அங்கிருந்து புறப்பட்டதையும், இயேசுவின் பகுதியில் அதே செயல்களில் விளக்கம் அளித்துள்ளார்"*[3] *என்றார்.*

*டொனால்டு A. ஹேங்கர் அவர்கள், இஸ்ரவேல் மக்கள் மற்றும் இயேசு ஆகியோரின் பயணத்தைக் குறித்து, "மீட்பின் வரலாற்றில் இரண்டு கணங்கள்" என்று குறிப்பிட்டார். அவர், "இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக எண்ணப்பட்டு, பெரிய தொடர்பு ஒன்றை வடிவமைக்கின்றன; இவ்வாறாக முன்னது, பிந்தியதின் முன்நிழலாக அல்லது பிந்தியதை முன்னெதிர் நோக்குவதாகக் காணப்படுகிறது, இதனால் பிந்தியது, முந்தியதன் உணர்ந்தறிதலாக அல்லது நிறைவேற்றமாக ஆகிறது" என்று கூறினார்.*[4] *ஆகையால், இஸ்ரவேலின் பாடுகளையும் வெற்றிகளையும்*

*இயேசு பகிர்ந்து கொள்பவராகச் சித்தரிக்கப்படுகிறார். இரு விஷயங்களிலும், தேவனே வழிநடத்திப் பாதுகாப்பவராகக் காணப்படுகிறார்.*

*ஓசியாவின் உரையைக் குறித்து (ஓசியா 11:1), டக்ளஸ் R. A. ஹேர் அவர்கள் பின்வருமாறு உள்கண்ணோக்கு நிறைந்த விளக்கங்களை அளித்தார்:*

> *... இது பின்னோக்கியும் முன்னோக்கியும் கண்ணோக்கிற்று. இயேசுவின் அவதாரத்தைப் போன்றே ஒரு புதிய தோற்றம் இருந்தது [1:1, 18], அது போன்றே ஒரு புதிய பயணமும் இருந்தது. ஓசியா, முதல் பயணத்தின் முடிவற்ற தன்மையைச் சுட்டிக்காண்பிக்கிறார்: "அவைகள் தங்களை அழைக்கிறவர்களின் முகத்துக்கு விலகிப் போய்விட்டார்கள்; பாகால்களுக்குப் பலியிட்டு, விக்கிரகங்களுக்குத் தூபங்காட்டினார்கள்" (ஓசியா 11:2). இயேசு தமதுச் சொந்த நபர்த்துவத்தில், இஸ்ரவேல் மக்களைப் பிரதிநிதித்துவப் படுகிறார், ஆனால் ஒரு தனிச்சிறப்பான வழியில், அவரது கீழ்ப்படிதல் மூலமாக, இஸ்ரவேல் மக்களின் கீழ்ப்படியாமைக்கு எதிராக அமைந்திருக்கிறார், அவர் ஒருவர் மாத்திரமே, தேவனால் "எனது குமாரன்" என்று அழைக்கப்படப் பாத்திரராக இருக்கிறார்.*[5]

## *ஏரோதுவின் கடுங்கோபம் (2:16-18)*

***16அப்பொழுது ஏரோது தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதைக் கண்டு, மிகுந்த கோபமடைந்து, ஆட்களை அனுப்பி, தான் சாஸ்திரிகளிடத்தில் திட்டமாய் விசாரித்த காலத்தின்படியே, பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் கொலைசெய்தான். 17புலம்பலும் அழுகையும் மிகுந்த துக்கங்கொண்டாடலுமாகிய கூக்குரல் ராமாவிலே கேட்கப்பட்டது:***

> ***ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, அவைகள் இல்லாதபடியால்***
> ***ஆறுதலடையாதிருக்கிறாள் என்று,***
> ***18எரேமியா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று.***

***வசனம் 16.** ஞானிகள் ஏரோதுவை* ஏமாற்றி விட்டனர் ***மற்றும் அவர்கள்** திரும்பி வரப்போவது இல்லை என்பதை **ஏரோது** கண்டபோது, அவர் மூர்க்க **வெறி கொண்டவரானார்.** "வஞ்சிக்கப்பட்டதை" என்பது, யாரேனும் ஒருவரை ஏளனம் செய்தல் அல்லது கேலி செய்தல் என்ற கருத்தைக் கொண்டுள்ள (empaizō என்ற) கிரேக்க வார்த்தையில் இருந்து வந்துள்ளது. ஏரோதுவைப் புறக்கணித்தல் என்பது ஞானிகளின் விருப்ப நோக்கமாக இருக்கவில்லை என்றாலும், அவர்கள் அவ்வாறு புறக்கணித்ததை, ஏரோது தமது கட்டளையை அவர்கள் ஏளனம் செய்ததாக எடுத்துக்கொண்டார் (காண்க 2:8, 12). அவர் தமது உணர்வுகளின் கட்டுப்பாட்டை இழந்தார். ஏரோது, தாம் ஏளனம் செய்யப்பட்டதாக நினைத்தபோது, அவரது கோபம் மூர்க்க வெறியாக வெடித்தது, தம்மைப் பழித்தவர்களைப் பழிவாங்க அவர் நாடினார். ஞானிகள் தப்பித்துச் சென்றதால், அவர்கள் மீதிருந்த மூர்க்கவெறியை அவரால் வெளியிட இயலாது இருந்தது; எனவே அவர் **இரண்டு வயதுக்கு உட்பட்ட** குழந்தைகள் என்ற, சமூகத்தில்*

மிகவும் ஒன்றும் அறியாதிருந்த பிரிவினரிடம் திரும்பினார். அந்தக் குறிப்பிட்ட வயது ஏன் தேர்ந்துகொள்ளப் பட்டது? ஞானிகள் நட்சத்திரத்தை முதலாவதாகக் கண்டதாகச் செய்த அறிக்கையின்படி, பிள்ளையின் வயதை அவர் கணக்கிட்டார் என்று வேதவசனப் பகுதி நமக்குக் கூறுகிறது (2:7). சரியான குழந்தையைத் தாம் அழிக்க வேண்டும் என்பதை முற்றாக நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக, அவர் சற்றுக் காலத்தைக் கூட்டியும் இருக்கலாம்.

**பெத்லகேமிலும்** அதன் சுற்றுப்புறங்களிலும், பச்சிளம் குழந்தைகளாக இருந்த எல்லா **ஆண்** பிள்ளைகளையும் கொலை செய்யும்படி ஏரோது கட்டளை கொடுத்தார், இந்தக் கட்டளை செயல் படுத்தப்பட்டது. ஒரு பச்சிளம் குழந்தையைக் கொல்வதே பரிதாபகரமானதாக இருக்கையில், சில குழந்தைகள் உண்மையில் கொலைசெய்யப்பட்டனர் என்பது பொதுவாக நமது யூகத்திற்கு அப்பாற்பட்டதாக உள்ளது. பெத்லகேம் என்பது ஒரு சிறிய நகரமாக இருந்தது, அந்த வேளையில் அதன் மக்கள் தொகை உண்மையில் எவ்வளவு என்று நாம் அறியாது இருந்த போதிலும், பத்து முதல் முப்பது வரையிலான எண்ணிக்கையில் குழந்தைகள் கொல்லப் பட்டிருக்கலாம் என்று சிலர் யூகிக்கின்றனர். இப்படிப்பட்ட வன்கொடுமை, அந்தக் காலத்தில் இருந்த யோசிப்பஸ் போன்ற மற்ற வரலாற்றாளர்களால் குறிப்பிடப்படாதது ஏன்? சார்பளவில் சிறு எண்ணிக்கையிலான பச்சிளம் குழந்தைகள் மாத்திரம் கொலை செய்யப்பட்டனர் என்பது சாத்தியமான முதலாவது பதிலாக உள்ளது. ஏரோது செய்த வன்கொடுமைகள் எல்லாவற்றையும் கவனித்துப் பார்க்கும்போது, இது நடந்த பகுதிக்கு வெளியே இருந்த மக்களால், இது அரிதாகவே கவனிக்கப் பட்டிருக்கும் என்பது இரண்டாவது காரணமாக இருந்திருக்கலாம்.

ஏரோது தாம், தேவனைப் புறக்கணித்ததில் ஆணவத்துடன் எதிர்த்து நின்றார். இந்த வரலாற்றின் முற்பகுதியில், யூதத்தலைவர்களிடத்தில் அவர், "கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பார்" (2:4) என்று விசாரித்திருந்தார். அவர் கொலை செய்ய முயற்சித்த இதே மேசியாவைத்தான் கர்த்தர் அபிஷேகம் செய்திருந்தார்! எகிப்தில் பிறந்த ஆண் இஸ்ரவேல் பிள்ளைகள் எல்லாரையும் கொலைசெய்விக்க முயற்சி செய்திருந்த பார்யோனுடன், ஏரோது ஒப்பிடப்பட முடியும் (யாத்திராகமம் 1:15, 16, 22). இருப்பினும் தேவன் - இயேசுவைப் பாதுகாப்பதற்கு யோசேப்பையும் மரியாளையும் அவர் பயன்படுத்தியது போன்றே - மோசேயின் நீதியுள்ள பெற்றோர்கள் மூலமாக அவரைப் பாதுகாத்திருந்தார் (யாத்திராகமம் 2:1-10; எபிரெயர் 11:23).[6] இவ்விரு நிகழ்வுகளிலும் ஒன்றும் அறியாத பல பச்சிளம் குழந்தைகள் இறந்தாலும், மோசேயும் இயேசுவும், தங்கள் மக்களின் விடுதலைக்காகப் பாதுகாக்கப் பட்டனர். இயேசுவின் விஷயத்தில், "எல்லாருடைய பாதுகாப்பிற்காகவும் மரிக்க நியமிக்கப் பட்டிருந்த அவருக்காக, பெத்லகேமில் இருந்த பச்சிளம் குழந்தைகள் மரித்தனர்" என்று மெக்கார்வீ சுட்டிகாண்பித்தார்.[7]

***வசனம் 17. ஏரேமியா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேற்றிற்று.*** இவ்வசனம், மத்தேயுவின் நிறைவேற்ற சூத்திரங்களில், நோக்கத்தை வெளிப்படுத்துவதும் சாதாரணமாகத் தோன்றுவதுமான பலத்த இணைப்புச் சொற்களான (*hina*) அல்லது (*hopōs*) என்பதை உள்ளடக்குவது இல்லை. இவ்வார்த்தைகள் முறையே, "அதனால்" மற்றும் "அவ்வாறு" என்று மொழிபெயர்க்கப்பட முடியும். ASV வேதாகமம், "தீர்க்கதரிசியின்

மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது *நிறைவேறும்படி*" என்ற வகையில் உள்ள மற்ற சூத்திரங்களில் (1:22; 2:15, 23; 4:14; 8:17; 12:17; 13:35; 21:4; 26:56; வலியுறுத்தம் கூட்டப் பட்டுள்ளது), இந்த இணைப்புச் சொற்கள் கொண்ட சொற்றொடர்களைச் சீராகத் தரவமைக்கிறது. மேலும் ஹேங்கர் அவர்கள் பின்வருமாறு விளக்கம் அளித்தார்:

> 27:9-10 தவிர, மற்ற எல்லா சூத்திரங்களும் ... ஒன்று அல்லது மற்றதைக் கொண்டுள்ளன, இந்த ஒரு வசனப்பகுதி மாத்திரம், பொல்லாத விஷயத்தை (காட்டிக் கொடுப்பதற்காகக் கொடுக்கப்பட்ட யூதாஸின்பணம்) குறிப்பிடும் மற்ற ஒரே மேற்கோளாக உள்ளது என்பது ஆர்வத்திற்குரியதாகும். இது தேவனுடைய நோக்கத்திற்குப் பொல்லாத எண்ணத்தைக் குறிப்பிட மத்தேயுவின் தயக்கத்தைப் பிரதிபலிப்பதாகக் காணப்படுகிறது. மத்தேயுவின் கருத்து நோக்கில், தேவனுடைய அருளிரக்கம், அவரது கிருபையுள்ள சித்தத்தைச் செயல்படுத்துவதில், பொல்லாங்கை மேலாதிக்கம் செய்கிறது.[8]

**வசனம் 18.** ஏரேமியா 31:15ன் வார்த்தைகளைக் குறிப்பிட்டு, ஒன்றும் அறியாத பிள்ளைகள் கொலை செய்யப்பட்டதற்கும், அந்தத் தீர்க்கதரிசியின் காலத்தில் நடந்த ஒரு நிகழ்வுக்கும் இடையில் ஒரு இணைகருத்தை, மத்தேயு செயல்விளக்கப்படுத்தினார்.

> **"புலம்பலும் அழுகையும் மிகுந்த துக்கங்கொண்டாடலுமாகிய கூக்குரல் ராமாவிலே கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, அவைகள் இல்லாதபடியால் ஆறுதலடையாதிருக்கிறாள்."**

மத்தேயு இந்த வார்த்தைகளைப் பயன்படுத்துதலை, மாதிரி ரீதியானது (மாதிரி/எதிர்மாதிரி) அல்லது தீர்க்கதரிசனத்தின் இரட்டை நிறைவேற்றம் என்ற வகையில் புரிந்து கொள்ள முடியும்.

"ராமா" என்பது எருசலேமில் இருந்து வடக்கில் சுமார் ஐந்து மைல்கள் தூரத்தில், பென்யமீனின் எல்லைப் பகுதியில் (யோசுவா 18:25) இருந்த ஒரு நகரம் ஆகும். தற்போதைய சந்தர்ப்பப் பொருளில் இதன் பொருத்தமானது - "ராகேல்," "பிள்ளைகளுக்காக" மற்றும் "அழுது" ஆகியவற்றுடன் - பின்வரும் உண்மைகளில் இருந்து தெளிவாகிறது: (1) யாக்கோபும் அவரது குடும்பமும், அவருக்குப் பிரியமான மனைவி ராகேல் ஒரு மகனைப் பெற்றவேளையில் இறந்தபோது, பெத்தேலில் இருந்து பெத்லகேமுக்குச் செல்லும் வழியில் தெற்கில் (ராமாவின் அருகில்) பயணம் சென்றனர். அந்த மகனுக்கு அவள் "எனது துக்கத்தின் மகன்" என்ற அர்த்தத்தில், பெனானி என்று பெயரிட்டாள், அவனுக்கு யாக்கோபு, "எனது வலது கரத்தின் மகன்" என்ற அர்த்தத்தில் பென்யமீன் என்று பெயரிட்டார். ராகேலின் கல்லறை, ராமாவுக்கு அருகில் இருந்தது (ஆதியாகமம் 35:16-18; 48:7; 1 சாமுவேல் 10:2). (2) இஸ்ரவேல் இராஜ்யம் பிரிவுபட்டபோது (1 இராஜாக்கள் 12:21, 23), பென்யமீனின் வம்சவழியார் யூதாவுடன் தங்கி இருந்தனர். கடைசியில் அவர்கள், பாபிலோனுக்கு அடிமைத்தளையில் கூட்டிச்செல்லப்பட்டனர்[9] (1:11ற்கான விளக்கங்களைக் காணவும்). பாபிலோனுக்குக் கூட்டிச் செல்லப்பட்ட யூதர்கள், அடிமைத் தளையினுள்

*தங்கள் பயணத்தின்போது (எரேமியா 40:1), ராகேலின் கல்லறைவழியாக நடந்து சென்றிருக்க வாய்ப்புள்ளது. (3) இஸ்ரவேல் மக்களின் தாய்மார்கள், தங்கள் பிள்ளைகள் கொல்லப்பட்டபோது அல்லது அடிமைத்தளையில் கூட்டிச்செல்லப் பட்டபோது, அழுது புலம்பியதைக் குறிப்பதற்கு எரேமியாவினால், ராகேல் என்ற பெயர் அடையாளத்துவமாகப் பயன்படுத்தப் பட்டது.*

*ராகேல் தனது பிள்ளைகள் பாபிலோனுக்குக் கூட்டிச்செல்லப்பட்டது பற்றி அவள் அழுதது என்பது, பெத்லகேமில் இருந்த தாய்மார்களின் மகன்கள் ஏரோதுவினால் கொல்லப்பட்டபோது, அந்தத் தாய்மார்கள் அழுததற்கு அடையாளத்துவமாக இருந்தது.* James E. Smith *அவர்கள், "ராகேல் என்ற பெயரின் அர்த்தம் (பெண் செம்மறி ஆடு), தீர்க்கதரிசியின் விவரிப்பிற்கு வலிவைக் கூட்டுகிறது. அவர் ராமாவில் (நேரடி அர்த்தத்தில், குன்றின் உச்சியில்), தனது குட்டிகளுக்காகக் கதறிய செம்மறி ஆட்டின் கூக்குரலைக் கேட்கின்றனர்" என்று விளக்கம் அளித்தார்.*[10] *மத்தேயுவினால் குறிப்பிடப்பட்ட வேதவசனப்பகுதி, புலம்பல் நிறைந்ததாக இருந்தாலும், அதன் நேர்மறையான முடிவின் காரணத்தால், இங்கு பயன்படுத்தப் பட்டிருக்கலாம். ஹேர் அவர்கள், "ராகேல் பற்றிய பரிதாபம் நிறைந்த சொற்கள் இங்கு அமைக்கப் பட்டிருந்தாலும், புதிய உடன்படிக்கையின் வாக்குத்தத்தம் உட்பட, எதிர்காலத்திற்கான நம்பிக்கை நிறைந்துள்ள அதிகாரமாக இது உள்ளது (எரேமியா 31:31-34). இப்படிப்பட்ட இணைவுகளை மனதிற்குக் கொண்டு வருவதற்காகவே, மத்தேயு ராமாவைப் பற்றிய விருப்ப நோக்கம் கொண்டுள்ளார் என்பதற்குச் சாத்தியம் உள்ளது" என்று உற்றுக்கவனித்தார்.*[11]

## *நாசரேத்தூருக்கு திரும்புதல் (2:19-23)*

***[19]ஏரோது இறந்தபின்பு, கர்த்தருடைய தூதன் எகிப்திலே யோசேப்புக்குச் சொப்பனத்தில் காணப்பட்டு: [20]நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு, இஸ்ரவேல் தேசத்திற்குப் போ; பிள்ளையின் பிராணனை வாங்கத்தேடினவர்கள் இறந்து போனார்கள் என்றான். [21]அவன் எழுந்து பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு, இஸ்ரவேல் தேசத்திற்கு வந்தான். [22]ஆகிலும், அர்கெலாயு தன் தகப்பனாகிய ஏரோதின் பட்டத்துக்கு வந்து, யூதேயாவில் அரசாளுகிறான் என்று கேள்விப்பட்டு, அங்கே போகப் பயந்தான். அப்பொழுது, அவன் சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டு, கலிலேயா நாட்டின் புறங்களிலே விலகிப்போய், [23]நாசரேத்து என்னும் ஊரிலே வந்து வாசம்பண்ணினான். நசரேயன் என்னப்படுவார் என்று, தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.***

***வசனம் 19.** சற்றுக் காலத்திற்குப் பின்பு, **தூதர் ஒருவர் எகிப்தில் யோசேப்பிடம் கனவில்** வந்தார். **ஏரோது இறந்தபோது** இந்த தரிசனம் நிகழ்ந்தது. பெரிய ஏரோதுவின் மரண வேளையைப் பற்றி* H. *லியோ போல்ஸ் அவர்கள், பின்வருமாறு விளக்கம் அளித்தார்:*

> *ரோமாபுரி கட்டுப்பட்டு 750 ஆண்டுகளுக்குப் பின்பு, பஸ்காவுக்குச் சற்று முன்னதாக, நமது காலத்தை நாம் கணிக்கும் முறையில் இருந்து நான்கு*

*ஆண்டுகளுக்கு முன்பு [கி.மு. 4], எரிகோவில் ஏரோது இறந்தார். அந்த ஆண்டில் ஏப்ரல் 12ம் தேதியன்று பஸ்கா நடந்தது என்றும் பஸ்காவுக்கு ஏழு முதல் பதினான்கு நாட்களுக்கு முன்பாக ஏரோது மரித்தார் என்றும் கணக்கிடப் பட்டுள்ளது.*[12]

ஏரோது இறந்தபோது, எழுபது வயதுள்ளவராக இருந்தார், அவர் ஏறக்குறைய முப்பத்து மூன்று ஆண்டுகள் ஆட்சி செலுத்தியிருந்தார். யோசிப்பஸ் அவர்களின் கூற்றுப்படி, அவர் பயங்கரமான மரணத்தினால் இறந்தார். அவரது குடல்களில் புண் ஏற்பட்டது, அழுகிப்போன மற்றும் புழுமுட்டை பிடித்த உறுப்புகளினால், தொடர்ந்து ஏற்பட்ட வலிப்புகளினால் மற்றும் கெட்ட நாற்றம் கொண்ட சுவாசத்தினால் என்ற விவரிப்புகள் உள்ளடக்குகின்றன.[13] உலகத்திற்கு அவ்வளவு அதிகமான துன்பங்களைக் கொண்டு வந்த மனிதருக்குப் பொருத்தமான முடிவாகவே அது இருந்தது.

ஏரோது மரிக்கும்போது, யூதர்கள் புலம்புவதற்குப் பதில் மகிழ்வார்கள் என்பதை ஏரோதுவே அறிந்திருந்தார். இந்தக் காரணத்தினால் அவர், யூதத் தலைவர்கள் எல்லோரையும் எரிகோ நகரில் இருந்த அரங்கத்தில் சிறைவைத்திருந்தார். அவர்களுக்குத் தேவையான வசதிகள் யாவையும் தரப்பட்டன; ஆனால் அவரது மரணம் பற்றிய அறிவித்தல் செய்யப்படும்போது, அவர்களுக்கு மரண தண்டனை தரப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப் பட்டிருந்தது. இருப்பினும், அவரது கொடூரமான திட்டம் செயல்படவில்லை. யூதத்தலைவர்ளைக் கொலை செய்வதற்கு அமர்த்தப்பட்ட கூலிப்படைக்கு சைகை காண்பிக்க வேண்டிய இரு மனிதர்களாகிய, ஏரோதுவின் சகோதரி சலோமியும் அவளது கணவர் அலெக்ஸஸ் ஆகியோர், அவர்களை விடுவிக்கும்படி சைகை காண்பித்தனர். ஏரோதுவின் சொந்த மரணத்திற்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக - ரோமாபுரியின் சம்மதத்துடன் - நடைபெற்ற கடைசிக் கொலை நடவடிக்கையில், டோரினுக்குப் பிறந்த அவரது மகனான அந்திபத்தர் என்பவர், அவருக்கு எதிராகச் சதிக்கொலைத் திட்டம் தீட்டியபடியால் அவரைக் கொலை செய்யப்படும்படி ஏரோது ஆணையிட்டார்.[14]

பெரிய ஏரோது இறந்தபோது, மல்த்தேஸ் மூலமாக அவருக்குப் பிறந்த மகன்களில் ஒருவரான, அர்க்கெலாயு என்பவர், தமது தந்தை அரசருக்குப் பொருத்தமான சவ அடக்கம் ஒன்றைப் பெற்றுக்கொண்டதை நிச்சயப்படுத்தினார். அவரது உடல் இரத்தாம்பரத்தால் மூடப்பட்டது. பொன் கிரீடம் ஒன்று அவரது தலையின்கீழ் வைக்கப்பட்டது, மற்றும் ஒரு செங்கோல் அவரது கையில் வைக்கப்பட்டது. அவரது உடல் பொன்னால் ஆன பெட்டியில் வைக்கப்பட்டு, அப்பெட்டியின் மீது எல்லா வகையான விலையுயர்ந்த கற்களும் பதிக்கப்பட்டன. அந்த சவப்பெட்டியைச் சுற்றிலும், எண்ணற்ற குடும்ப உறுப்பினர்களும், அவரது தனிசிறந்த போர்வீரர்ரகளும் அவரது முழுப்படையும் சூழ்ந்திருந்தனர். ஐந்நூறு வேலைக்காரர்கள் வழிமுழுவதிலும் நறுமணங்களைப் பரப்பினர். அவரது உடல், எரிகோவில் இருந்து, பெத்லகேமின் தென்கிழக்கில் மூன்று மைல்கள் தொலைவில் இருந்த ஏரோதியம் என்ற இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.[15] அது ஏரோதுவினால் கட்டப்பட்ட ஆடம்பரமான பல கோட்டைகளில் ஒன்றாக இருந்தது. இந்த இடத்தில் பல ஆண்டுகள் புதைபொருள் ஆராய்ச்சிக்காகத் தோன்டிய பின்பு, இஸ்ரவேல்

*புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள், ஏரோதுவின் கல்லறையை அவரது கல்லால் ஆன சவப்பெட்டியுடன் கண்டுபிடித்துள்ளதாக உரிமை கோருகின்றனர். இருப்பினும் பழங்காலத்தில், மதிப்பு மிக்க பொருள்கள் கொள்ளையடிக்கப் பட்டன, கல் சவப்பெட்டி உடைக்கப்பட்டது மற்றும் இருந்த எலும்புக்கூடு எடுக்கப்பட்டது.*

***வசனம் 20. இஸ்ரவேல் நாட்டிற்குத்*** *திரும்பும்படி, யோசேப்புக்குத் தூதர் கனவில் அறிவுறுத்தினார். மேலும் அவர், "பிள்ளையின் பிராணனை வாங்கத்தேடினவர்கள் இறந்து போனார்கள்" என்றும் அவருக்குத் தகவல் அறிவித்தார். ஏரோது இறந்து போயிருந்ததால், அவர் இனியும் இயேசுவுக்கு ஒரு அச்சுறுத்தலாக இருக்கவில்லை. இவ்விடத்தில் உள்ள மொழிநடை, மோசேக்குப் பேசப்பட்ட வார்த்தைகளின் எச்சமாக உள்ளது: "நீ எகிப்துக்குத் திருப்பிப் போ, உன் பிராணனை வாங்கத் தேடின மனிதர் எல்லாரும் இறந்துபோனார்கள்" (யாத்திராகமம் 4:19).*

***வசனம் 21.*** *இதற்கு முந்திய இரு நிகழ்வுகளில்* ***யோசேப்பு*** *சொய்திருந்தது போன்றே (1:24, 25; 2:14, 15), தூதனின் அறிவுறுத்தலுக்கு அவர் உடனடியாகக் கீழ்ப்படிந்து, தமது குடும்பத்துடன் எகிப்தை விட்டுப் புறப்பட்டார்.*

***வசனம் 22.*** *இஸ்ரவேல் நாட்டிற்குள் அவர்கள் நுழைந்தபோது,* ***அர்கெலாயு தன் தகப்பனாகிய ஏரோதின் பட்டத்துக்கு வந்து, யூதேயாவில் அரசாளுகிறான்*** *என்று யோசேப்பு கேள்விப் பட்டார். அர்கெலாயு, யூதர்களுக்கு வாக்குறுதிகள் ஏற்படுத்தி இருந்தாலும், அதிகாரத்தின் பதவியை அவர் மேற்கொண்ட உடன், அவர் தமது தந்தையைப் போன்றே தாமும் இரக்கமற்று இருந்ததை நிரூபித்தார். ஏரோதுவின் உயிலில் அர்கெலாயுவுக்கு "அரசர்" பட்டம் தரப்பட்டிருந்தது. இருப்பினும் யூதர்கள் இதைப் பற்றி அகஸ்து இராயரிடம் முறையிட்டபோது அவருக்கு, "மக்களின் பிரபு" என்று அர்த்தப்படுகிற "எத்தனார்க்" என்ற பட்டம் தரப்பட்டது. அவர் யூதேயா, சமாரியா மற்றும் இதுமேயா - இது அவரது தந்தையின் ஆட்சிப்பகுதியில் சுமார் பாதியாகும் - ஆகியவற்றின் மீது அதிகாரம் கொண்டிருந்தார். ஏரோதுவின் சமாரிய மனைவியான மல்தேஸ் என்பவரின் மகனும், அர்கெலாயுவுக்கு சகோதரருமான, அந்திப்பா என்பவர், கலிலேயா மற்றும் பெரேயா ஆகிய பகுதியின் "காற்பங்கு தேசாதிபதி" என்று பெயரிடப்பட்டார். எருசலேமின் கிளியோபாட்ராவின் மூலம் ஏரோதுவுக்குப் பிறந்த மகனான, இரண்டாம் பிலிப்பு, திராக்கொனித்தி, இத்துரேயா, கவுலானிட்டிஸ், பித்தினியா மற்றும் அவுரானிட்டிஸ் ஆகிய பகுதிகளின் "காற்பங்கு தேசாதிபதி" ஆனார். "காற்பங்கு தேசாதிபதி" என்பது "கால்பங்கு நாட்டின் மீது ஆட்சி செலுத்துபவர்" என்று அர்த்தப்படுகிறது (காண்க லூக்கா 3:1).[16] "இராஜா," "எத்தனார்க்" மற்றும் "காற்பங்கு தேசாதிபதி" ஆகியவை அவற்றின் முக்கியத்துவத்தின் வகையில் இறங்கு வரிசையில் பட்டியல் இடப்பட்டுள்ளன.*

*ஏரோது உயிருடன் இருந்தபோதே, ரோமானிய அதிகாரத்தின் அடையாளமான பெரிய பொன் கழுகு ஒன்று, தேவாலயத்தின் பெரிய வாசலில் வைக்கப்பட வேண்டும் என்று கட்டளை இட்டிருந்தார். யூதர்களின் முக்கியமான இரண்டு குருக்களான, யூதாவும் மத்தியாவும், அந்தக் கழுகை இடித்துத் தள்ளும்படி தங்கள் மாணவர்களை ஊக்குவித்தனர். அவர்களில் சிலர் தேவாலயத்துக் கூரையில் ஏறி அந்தக் கழுகை நீக்கவும் அதை அழிக்கவும்*

முயற்சி செய்தனர். இந்த மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு அவர்களுக்கு இலேசான தண்டனைகள் தரப்படுகையில், அந்த இரண்டு குருக்களும் உயிருடன் எரிக்கப் பட்டனர்.[17] பெரிய ஏரோதுவின் மரணத்திற்குப் பின்வந்த பஸ்கா பண்டிகையில், யூதர்கள் மத்தியில் கனப்படுத்தப்பட்ட இரண்டு குருக்கள், கொலை செய்யப்பட்டதின் காரணமாக எதிர்ப்பு தெரிவித்ததால் பெரிய கலகம் எழுந்தது, இந்தத் தொந்தரவைத் தணிப்பதற்கு, அர்கெலாயு கடுமையான நடவடிக்கைகளை எடுத்தார்; அந்த செயல்முறையில், மூவாயிரம் யூதர்கள் கொல்லப்பட்டனர்.[18] இதைப் போன்ற மற்ற அட்டூழியங்களுக்குப் பின்னர், யூதர்கள் அகஸ்து இராயரிடம் முறையிட்டனர். கடைசியாக, ஒன்பது ஆண்டுகள் மிருகத்தனமான ஆட்சிக்குப்பின்னர், அர்கெலாயு, பிரான்சு நாட்டின் வியன்னி என்ற இடத்திற்கு நாடுகடத்தப்பட்டு, கி.பி. 6ல் அங்கே இறந்தார்.[19] அவரது மரணத்தைத் தொடர்ந்து, அவர் ஆட்சி செய்த எல்லைப்பகுதியானது ரோமானிய மாகாணமாயிற்று, அது ஒரு ரோமப் பிரதிநிதியால் ஆளப்பட்டது. கிரேனியுஸ் கேப்போனியஸ், ஆம்பிவியஸ், அன்னியுஸ் ரூஃபஸ், வலேரியஸ் கிரேட்டஸ், பெலிக்ஸ் மற்றும் பெஸ்து ஆகிய யாவரும் இந்தப் பதவியில் பணி செய்தனர்; ஆனால் இயேசுவை மரணத்திற்குத் தீர்வையிட்ட பொந்திய பிலாத்து என்பவர்தாம் இவர்களில் நன்கு அறியப்பட்டவராக இருந்தார் (27:2, 11-26).

காற்பங்கு தேசாதிபதியான அர்கெலாயு பற்றி யோசேப்பு கேள்விப்பட்டிருப்பார் என்பதில் ஐயம் எதுவும் இல்லை - மற்றும் அவர் நியாயமாக முடிவு செய்தலில் - பெத்லகேமுக்குத் திருப்பிச் செல்லப் *பயந்தார்*. அவர் யூதேயாவை விட்டுச் செல்லும்படி *கனவில் தேவனால் எச்சரிக்கப்பட்டார்*. அந்த வேளையில், அவர் அந்திப்பா ஆண்ட பகுதியான **கலிலேயாவுக்குச்** செல்லும்படியும் கூறப்பட்டார். பெரிய ஏரோதுவின் இந்த மகன் சமாதானத்தின் மனிதர் என்று ஒப்புக்கொள்ளப் பட்டார். அந்திப்பா பற்றி போல்ஸ் அவர்கள் பின்வருமாறு கூறினார்:

> இவர் மாறுபட்ட மனிதராக இருந்தார் மற்றும் இவர் தமது சகோதரனான அர்கெலாயுவைக் காட்டிலும் அதிகம் தாட்சணியத்துடன் ஆட்சி செய்தார். ஏரோது அந்திப்பாவும் அர்கெலாயுவும் இந்த வேளையில் ஒருவர் மீது மற்றவர் விரோதத்துடன் இருந்தனர்; இது யோசேப்புக்கும் அவரது குடும்பத்திற்கும் மிகவும் சாதகமான சூழ்நிலையாக இருந்தது.[20]

கலிலேயா என்பது பலஸ்தீன நாட்டின் வடக்குப் பகுதியாக இருந்தது. இது கல்வியை நாடுபவர்களின் பகுதியாக இருக்கவில்லை, ஆனால் இதன் இயற்கைச் சுற்றுச்சூழலானது, மீனவர்களும் வர்த்தகர்களும் வாழும் இடமாகும்படி இதை வழிநடத்திற்று. மேலும் இதில் புறஜாதியார் அதிகம் குடியிருந்தனர் (4:15). இந்தப் பகுதியில் இருந்த யூதர்கள், குறிப்பிடத்தக்க குருக்களால் விரோதத்துடன் நோக்கப்பட்டனர். எனவே அவர்களின் தலைமையைப் பின்பற்றி மற்றவர்களாலும் அவ்வாறே நோக்கப்பட்டனர் (காண்க யோவான் 7:52; நடபடிகள் 2:7; 4:13). யோசிப்பஸ் அவர்களின் கூற்றுப்படி, கலிலேயாவில் சிறுநகரங்களும் கிராமங்களும் மொத்தம் 240 இருந்தன, அவை ஒவ்வொன்றிலும் பதினைந்தாயிரத்திற்கு அதிகம் இல்லாத குடியிருப்புக்கள் இருந்தன.[21]

**வசனம் 23.** யோசேப்பு தமது குடும்பத்தை, நாசரேத்தூரில் அமைத்தார், இது அனேகமாக மரியாளின் சொந்த ஊராக இருந்திருக்க வேண்டும் (காண்க லூக்கா

*2:4). **நசரேயன் என்னப்படுவார் என்று, தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.** இவ்விடத்தில் மத்தேயு "தீர்க்கதரிசி" என்ற ஒருமைச் சொல்லுக்குப் பதிலாக "தீர்க்கதரிசிகள்" என்ற பன்மைச் சொல்லைப் பயன்படுத்தினார். குறிப்பிட்ட இந்தத் தீர்க்கதரிசனம் பழைய ஏற்பாட்டின் எந்த வசனப்பகுதியிலும் அடங்கி இருப்பதில்லை, மற்றும் இதன் மிகச்சரியான ஆதாரமூலம் அறியப்படாததாக உள்ளது. இந்தத் தீர்க்கதரிசனத்தின் தோற்றத்திற்குக் குறைந்தபட்சம் மூன்று விளக்கங்கள் உள்ளன.*

*முதலாவது, சிலர் "நசரேயன்" என்ற சொற்றொடர், நசரேய விரதத்துடன் தொடர்புடையது (எண்ணாகமம் 6; நியாயாதிபதிகள் 13:5-7) என்று நினைக்கின்றனர். இருப்பினும், இயேசு தேவனுக்குப் பரிசுத்தராக இருந்த போதிலும், அவர் நசரேய விரதம் உடையவராக இருக்கவில்லை. அவர் "போஜனபானம்பண்ணுகிறவராய்" வந்தார் (11:18, 19) மற்றும் மரித்தோரைத் தொடுவதற்கு அவர் தயங்கவில்லை (மாற்கு 5:35, 41; லூக்கா 7:14). மற்றும் இயேசு தமது முடியை நீளமாக வளர்த்தார் என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை.*

*இரண்டாவது, "நசரேயன்" என்பது ஏசாயா 11:1ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஈசாயின் வேரிலிருந்து கிளம்பி வளருவதாக இருந்த கிளைக்கான குறிப்பாக இருக்கலாம். என்று மற்றவர்கள் கூறுகின்றனர். "தண்டு" அல்லது "கிளை" என்று அர்த்தப்படுகிற (netser என்ற) எபிரெய வார்த்தை "நசரேயன்" என்ற வார்த்தையைப் போன்றதாகவே உள்ளது. இது ஒருவேளை, வார்த்தை விளையாட்டாக இருந்திருந்தால், முதல் இரண்டு அதிகாரங்களும், தாவீதின் சந்ததி என்ற வகையில் இயேசுவுக்குக் குறிப்புகளால் அடைப்புக் குறிக்களுக்குள் இடப்பட்டிருக்கும் (1:1; 2:23).*

*மூன்றாவது, இயேசு மனிதர்களால் பழிக்கப்பட்டு ஏளனம் செய்யப்படுவார் என்பது பற்றிய பல்வேறு தீர்க்கதரிசனங்களை, எழுத்தாளர் இவ்விடத்தில் ஒன்றிணைத்தார் என்று, பல விளக்கவுரையாளர்கள், கருத்துத் தெரிவிக்கின்றனர் (காண்க சங்கீதம் 22; 69; ஏசாயா 49:7; 53:2, 3, 8; தானியேல் 9:26). இயேசு, பழிக்கப்பட்ட நகரமான நாசரேத்தூரில் இருந்து வந்த மனிதர் என்று அறியப் பட்டிருந்தார் (யோவான் 1:45, 46), மற்றும் அவர் மனிதர்களால் ஏளனம் செய்யப்பட்டவராக இருந்தார் (12:24; 27:21-23, 63; லூக்கா 23:11; யோவான் 1:11; 5:18; 6:66; 9:22).*

*இந்தக் கடைசி விளக்கம் மிகவும் ஏற்புடையதாகக் காணப்படுகிறது. மத்தேயு சுவிசேஷத்தில் உள்ள மற்ற பல நிறைவேற்ற சூத்திரங்கள் போலின்றி, 2:23ல் உள்ள சூத்திரம், ASV வேதாகமத்தில் "கூறி" ["saying"] என்ற மொழிபெயர்க்கப்பட்டுள்ள (ஆனால் NASB வேதாகமத்தில் மொழிபெயர்க்கப் படாது விடப்பட்டுள்ள) (legontos என்ற) வினைச்சொல் குறைவுபடுவதாக உள்ளது. இந்த விடுதல் மற்றும் "தீர்க்கதரிசிகள்" என்ற பன்மைக் குறிப்பு ஆகியவற்றைப் பற்றி R. T. ஃபிரான்ஸ் அவர்கள் பின்வருமாறு முடிவு செய்தார்:*

> *இது, [''நசரேயன் என்னப்படுவார்''] என்பது குறிப்பிட்ட வசனப்பகுதியின் மேற்கோளாக இருக்கிறது என்றல்ல, ஆனால் தீர்க்கதரிசன எதிர்பார்ப்பின் ஆய்வுக்கருத்தினுடைய தொகுப்புரையாக இருக்கிறது என்று அர்த்தப்படுகிறது என்பதாகக் கருத்துத் தெரிவிக்கிறது.*

> இவ்வாறாக மத்தேயு, நாசரேத்தூரின் மங்கலான தன்மையில், தாழ்மையான மற்றும் புறக்கணிக்கப்பட்ட மேசியா பற்றிய பழைய ஏற்பாட்டு சுட்டிகாண்பித்தல்களின் நிறைவேற்றத்தைக் கண்டார் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.[22]

ஜேக் P. லூயிஸ் அவர்கள், "மேற்கோளின் பின்னணி எதை நிரூபிப்பதாக இருந்தாலும், புதிய ஏற்பாட்டில் உள்ள ['நசரேயன்' என்ற] இந்தச் சொற்றொடர், நாசரேத்தூரில் இருந்து வந்தவர் என்று அர்த்தப்படுவதாகக் காணப்படுகிறது" என்று எழுதினார்.[23] இந்த அதிகாரம், கிறிஸ்து பிறந்த இடமான பெத்லகேமில் தொடங்குகிறது (2:1), மற்றும் அவரது சொந்த ஊரான நாசரேத்தில் முடிகிறது (2:23). இது, இயேசுவின் பிறப்பு மற்றும் வளர்ப்பு ஆண்டுகள், பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றின என்ற காண்பிக்கிறது.

## ✧✧✧✧✧ பாடங்கள் ✧✧✧✧✧

## கிறிஸ்மஸ்க்கு அடுத்த நாள் (2:13-18)

கிறிஸ்மஸ் காலம் என்பது ஆண்டின் அற்புதமான பருவமாக உள்ளது. அந்த வேளையில், உலகத்தின் பல பகுதிகளில் கொண்டாட்டங்கள் கடைபிடிக்கப் படுகின்றன. அன்பு, சந்தோஷம் பூமியில் சமாதானம் மற்றும் மனிதரில் நல் சிந்தை ஆகியவற்றின் மீது கவனம் குவிக்கப்படுகிறது. மக்கள், தாராளத்தன்மையின் ஆவியைக் கொண்டுள்ளனர்.

கிறிஸ்துமஸ்க்கு அடுத்த நாள் உங்கள் வீடு எப்படிப்பட்டதாக இருக்கும்? வெறுமையான பெட்டிகள், கிழிந்துபோன மேல்மூடும் தாள்கள் மற்றும் கவிழ்க்கப்பட்ட கோப்பைகள் பற்றி நினைத்துப் பாருங்கள். குப்பைத் தொட்டிகள் நிறைந்து கவனமின்றி குவிக்கப் பட்டுள்ளன. தாங்கள் விரும்பிய வகையில் இல்லாத பரிசுப் பொருட்களைத் திரும்பக் கொடுப்பதற்காக, கடைகளில் நீண்ட வரிசைகளில் பொறுமையற்றுக் காத்திருக்கும் மக்களின் கோப உணர்வுகளுக்கு, இதற்கு முன்பிருந்த கிறிஸ்துமஸ் பண்பின் ஆவி, வழிகொடுக்கிறது. ஆண்டு முழுவதிலும், கிறிஸ்மஸ் பண்பை நாம் காத்துக் கொள்ள முடிந்தால், அது மிக நல்லவிஷயமாக இருக்கும் அல்லவா?

டிசம்பர் 25 என்பது கிறிஸ்துவின் உண்மையான பிறந்த நாளாக இராதிருக்கையில், அந்த நாளில் மக்களில் பலர் அதைக் கொண்டாடுகின்றனர். அந்தக் காலகட்டத்தின்போது, அவர்களின் கவனக்குவிப்பு எங்கே உள்ளதோ, அதை நாம் அனுகூலமாக்கிக் கொள்ள வேண்டும். சுவிசேஷ விபரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள நிகழ்வுகளின் அடிப்படையில் அவரது பிறப்பைப் பற்றிக் கலந்துரையாடலாம். அவரது பிறப்பிற்குப் பிந்திய நாளில் (நாட்களில்) நடந்தவற்றைப் பற்றிப் புரிந்து கொள்ள நாம் எப்போதாவது நின்று நிதானித்து இருக்கிறோமா? இயேசு பிறந்ததற்குப் பின்வந்த நாட்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை நாம் நினைவுகூருவோமாக. கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய சந்தோஷம் ஆண்டு முழுவதிலும் நம்மிடத்தில் இருக்க நாம் முயற்சி செய்ய வேண்டும்.

## *பெற்றோர்களின் விசேஷித்த பங்கு (2:13-15, 19-23)*

*யோசேப்பும் மரியாளும், தங்கள் மகனான இயேசுவை பாதுகாப்பதிலும் வளர்ப்பதிலும் வலிவார்ந்த பங்கைக் கொண்டிருந்தனர். மெக்கார்வீ அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *அந்தப் பிள்ளையை எல்லா அபாயங்களுக்கும் மத்தியில் பாதுகாத்து வளர்த்தல் என்பதற்காகவே அவர்களைத் தேவன் அழைத்திருந்தார், மற்றும் அவர்கள் பரலோகத்தின் நம்பிக்கையை உண்மையான வகையில் நிறைவேற்றினர். இருப்பினும், இவ்விதமான சூழ்நிலையில் அமைக்கப்பட்ட பெற்றோர்களாக, மரியாளும் யோசேப்பும் மாத்திரம் இருப்பதில்லை; ஒவ்வொரு பிள்ளையையும் தக்க முறையில் வளர்த்தல் என்ற மாபெரும் பணியில் பெற்றோர்கள் யாவருமே இவ்விதமான மாபெரும் செயலைச் செய்ய வேண்டியவர்களாகவே உள்ளனர்.*[24]

*தங்கள் பிள்ளைகளை மிகச்சிறந்த வகையில் வளர்த்த தேவபக்தியுள்ள பெற்றோர்கள் பற்றிய மற்ற உதாரணங்களில், (1) மோசே, ஆரோன் மற்றும் மிரியாம் ஆகியோரின் பெற்றோர்களான அம்ராம் மற்றும் யோகேபேத் (யாத்திராகமம் 2:1-10; எண்ணாகமம் 26:59); (2) சாமுவேலின் பெற்றோர்களான எல்க்கானா மற்றும் அன்னாள் (1 சாமுவேல் 1:1-2:11); (3) யோவான் ஸ்நானனின் பெற்றோர்களான சகரியா மற்றும் எலிசபெத் (லூக்கா 1); மற்றும் தீமோத்தேயுவின் பாட்டியும் தாயுமான லோவிசாள் மற்றும் ஐனிக்கேயாள் (2 தீமோத்தேயு 1:5; காண்க நடபடிகள் 16:1-3) ஆகியோர் அடங்கியுள்ளார்.*

*இன்றைய நாட்களில், கிறிஸ்தவப் பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளைக் கர்த்தருக்குள் வளர்ப்பதில் மாபெரும் அறைகூவலைக் கொண்டுள்ளனர் (எபேசியர் 6:4; தீத்து 2:4). பிள்ளைகள், மாம்சப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய துன்பங்கள் இரண்டிலும் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும். தக்க வகையில் மலர்ந்து செழிப்பதற்கு, அவர்களுக்கு, பயிற்சி, ஊக்குவித்தல் மற்றும் சிட்சித்தல் ஆகியவற்றின் நல்லதொரு கலவை தேவைப்படுகிறது. அவர்கள் வாயின் வார்த்தையினாலும் தேவபக்தி உள்ள உதாரணங்களினாலும் தேவனுடைய சத்தியத்தில் போதிக்கப்பட வேண்டும். தேவனுடைய இராஜ்யத்தில் ஊழியம் செய்யும் விசுவாசிகளாகும்படி பிள்ளைகளை வளர்த்தல் என்பது ஒருவர் தமது வாழ்வில் கொண்டிருக்கக் கூடிய மிகுந்த வளமான பணிநிறைவேற்றமாகவும் ஆசீர்வாதமாகவும் உள்ளது.*

டேவிட் ஸ்டுவர்ட்

---

*குறிப்புகள்*

[1]Philo Flaccus 6. [2]Leon Morris, *The Gospel According to Matthew*, Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 43. [3]J. W. McGarvey, *The New Testament Commentary,* vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 29. [4]Donald A. Hagner, *Matthew* 1-13, Word Biblical Commentary, vol. 33A (Dallas: Word Books, 1993), 36. [5]Douglas R. A. Hare, *Matthew,* Interpretation (Louisville: John Knox Press, 1993), 15-16. [6]*இவ்வரலாறுகளின் மற்ற இணைகருத்துக்களுக்கு,* Hagner, *34ல் காணவும்.* [7]McGarvey, 29. [8]Hagner, 37. [9]*இதற்குப்பதிலாகச் சில கல்வியாளர்கள்,*

*ஏரேமியா 31:15ன் மேற்கோளை, வடக்குக் கோத்திரத்தார் அசீரிய அடிமைத்தளையில் இருந்த நிகழ்வுடன் (கி.மு. 722) தொடர்பு படுத்துகின்றனர். ராகேல் யோசேப்பின் தாயாகவும் இருந்தாள் மற்றும், எப்பிராயீம், மனாசே என்ற, இஸ்ரவேலின் புகழ்பெற்ற இரண்டு கோத்திரங்கள் அவளது மகன்களில் இருந்து தோன்றின என்பதை அவர்கள் சுட்டிக்காண்பிக்கின்றனர். மற்றும் "எப்பிராயீம்" என்பது தீர்க்கதரிசனத்தின் சந்தர்ப்பப் பொருளைச் சுற்றிக் காணப்படுகிறது (எரேமியா 31:18, 20).* [10]James E. Smith, *Jeremiah and Lamentations*, Bible Study Textbook Series (Joplin, Mo.: College Press, 1972), 522.

[11]Hare, 16. [12]H. Leo Boles, *A Commentary on the Gospel According to Matthew* (Nashville: Gospel Advocate Co., 1936), 58. [13]Josephus *Antiquities* 17.6.5. [14]Ibid., 17.6.5; 17.8.2; 17.7.1 [15]Ibid., 17.8.3. [16]Ibid., 17.11.4. [17]Ibid., 17.6.2-4. [18]Ibid., 17.9.3. [19]Ibid., 17.13.2. [20]Boles, 61.

[21]Josephus *Life* 45; *War* 3.3.2. [22]R. T. France, *The Gospel According to Matthew*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 88-89. [23]Jack P. Lewis, *The Gospel According to Matthew*, Part 1, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 52. He referred to Mt. 2:23; 21:11; 26:71; Lk. 18:37; Jn. 1:45, 46; 18:5, 7; 19:19; Acts 10:38; 24:5. [24]McGarvey, 29.